# தமிழ்-எட்டாம் வகுப்பு மூன்றாம் பருவம்

## ஒன்றே குலம்

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1.அறநெறியில் வாழ்பவர்கள் உயிரைக் கவர வரும் ................. க் கண்டு அஞ்சமாட்டார்கள்.

அ) புலனை ஆ) அறனை இ) நமனை ஈ) பலனை

**இ) நமனை**

2.ஒன்றே ............... என்று கருதி வாழ்வதே மனிதப்பண்பாகும்.

அ) குலம் ஆ) குளம் இ) குணம் ஈ) குடம்

**அ) குலம்**

3.'நமனில்லை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..............

அ) நம் + இல்லை ஆ) நமது + இல்லை இ) நமன் + நில்லை ஈ) நமன் + இல்லை

**ஈ) நமன் + இல்லை**

4.நம்பர்க்கு + அங்கு என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் .................

அ) நம்பரங்கு ஆ) நம்மார்க்கு இ) நம்பர்க்கங்கு ஈ) நம்பங்கு

**இ) நம்பர்க்கங்கு**

**குறுவினா**

**1.யாருக்கு எமனைப் பற்றிய அச்சம் இல்லை?**

மனிதர் அனைவரும் ஒரே இனத்தினர். உலகைக் காக்கும் இறைவனும் ஒருவனே. இக்கருத்துகளை நன்றாக மனத்தில் நிறுத்துபவர்களுக்கு எமனைப் பற்றிய அச்சம் இல்லை .

2.**மக்களின் உள்ளத்தில் நிலைபெற்று வாழ விரும்புபவர் செய்ய வேண்டியது யாது?**

மக்களின் உள்ளத்தில் நிலைபெற்று வாழ விரும்புபவர் செய்ய வேண்டியது "மனிதர் அனைவரும் ஒரே இனத்தினர், "உலகைக் காக்கும் இறைவனும் ஒருவனே" என்ற இக்கருத்துகளை மனத்தில் நிறுத்திக் கொள்வது ஆகும்.

**சிறுவினா**

**1.மக்களுக்குச் செய்ய வேண்டிய தொண்டு குறித்துத் திருமூலர் கூறுவது யாது?**

அடியார்களாகிய மக்களுக்குக் கொடுப்பது கோயிலில் இருக்கும் இறைவனுக்கும் சேரும்.

**சிந்தனை வினா**

**1.அன்றாட வாழ்வில் நாம் பிறருக்கு எத்தகைய உதவிகளைச் செய்யலாம்?**

1. பிறருக்கு உதவி செய்யும் போது பயனை எதிர்பார்க்காமல் உதவி செய்ய வேண்டும்.
2. நாம் வெளியில் செல்லும் போது நம் வீட்டில் உள்ளவர்களுக்கு ஏதாவது தேவையா என்று கேட்டு அவர்களின் தேவையை நிறைவேற்றலாம்.
3. வீட்டில் அம்மாவிற்கும் அப்பாவிற்கும் அவர்கள் கூறும் சிறு வேலைகளைச் செய்து அவர்களின் வேலைச் சுமையைக் குறைக்கலாம்.
4. பள்ளியில் உடன் பயிலும் மாணவர்களுக்குப் புத்தகம், குறிப்பேடு, எழுதுகோல் போன்றவை தேவையேற்படின் கொடுத்து உதவலாம்.
5. படிப்பில் பின் தங்கிய மாணவர்களுக்கு படிப்பதற்கு உதவி செய்யலாம்.
6. சாலைகளில் நடந்து செல்லும்போது, மாற்றுத் திறனாளிகளைக் கண்டால், அவர்களுக்கு உதவலாம். இவ்வாறு நம்மைச் சுற்றியுள்ளவர்களின் சின்ன சின்ன தேவைகளை நிறைவேற்றலாம்.

## மெய்ஞ்ஞான ஒளி

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1.மனிதர்கள் தம் ............... தீய வழியில் செல்ல விடாமல் காக்க வேண்டும்.

அ) ஐந்திணைகளை ஆ) அறுசுவைகளை இ) நாற்றிசைகளை ஈ) ஐம்பொறிகளை

**ஈ) ஐம்பொறிகளை**

2.ஞானியர் சிறந்த கருத்துகளை மக்களிடம் ................

அ) பகர்ந்தனர் ஆ) நுகர்ந்தனர் இ) சிறந்தனர் ஈ) துறந்தனர்

**அ) பகர்ந்தனர்**

3.‘ஆனந்தவெள்ளம்’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ...............

அ) ஆனந்த + வெள்ளம் ஆ) ஆனந்தன் + வெள்ளம்

இ) ஆனந்தம் + வெள்ளம் ஈ) ஆனந்தர் + வெள்ளம்

**இ) ஆனந்தம் + வெள்ளம்**

4.உள் + இருக்கும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ...................

அ) உள்ளேயிருக்கும் ஆ) உள்ளிருக்கும்

இ) உளிருக்கும் ஈ) உளருக்கும்

**ஆ) உள்ளிருக்கும்**

**குறுவினா**

**1.உண்மை அறிவை உணர்ந்தோர் உள்ளத்தில் நிகழ்வது யாது?**

உண்மை அறிவனை உணர்ந்தோர் உள்ளத்தில் இறைவன் இன்பப் பெருக்காய்க் கரைகடந்து பொங்கிடும் கடலாக விளங்குகின்றான்.

**2.மனிதனின் மனம் கலங்கக் காரணமாக அமைவது யாது?**

இறைவனின் திருவடிகளின் மேல் பற்று வைக்காமல், பணத்தின் மீது ஆசை வைப்பது மனிதனின் மனம் கலங்கக் காரணமாக அமைகிறது.

**சிறுவினா**

**1.குணங்குடியார் பராபரத்திடம் வேண்டுவன யாவை?**

(i) “மேலான பொருளே! தம் தீய எண்ணங்களை அடியோடு அழித்தவர்கள் பி மனத்துள்ளே எழுந்தருளி இருக்கும் உண்மையான அறிவு ஒளி ஆனவனே! உன் a திருவடிகளின்மேல் பற்று வைக்காமல் பணத்தின்மீது ஆசை வைத்ததால் நான் மனம் கலங்கி அலைகின்றேன்.

(ii) நீ உண்மை அறிவினை உணர்ந்தவர்களின் உள்ளத்துக்குள் இன்பப் பெருக்காய்க் கரைகடந்து பொங்கிடும் கடலாக விளங்குகின்றாய்.

(iii) மேலான பொருளே! ஐம்பொறிகளை அடக்கி ஆள்வது மிகவும் அரிய செயலாகும். அப்பொறிகளின் இயல்பை உணர்ந்து நல்வழிப்படுத்தும்

**சிந்தனை வினா**

**1.ஐம்பொறிகளைக் கொண்டு நாம் செய்ய வேண்டிய நற்செயல்கள் யாவை?**

(i) தன்னிலும் தகுதி முதலானவற்றில் குறைந்தவர்கள் என்றாலும் அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்ய வேண்டும்.

(ii) இன்சொல் மட்டுமே பேசி மகிழ வேண்டும்.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

(iii) பிறருக்கு உண்டாகும் துன்பங்களைத் தம் துன்பமாக எண்ணி, இரக்கப்பட்டு, தன்னால் இயன்றதைச் செய்ய வேண்டும்.

(iv) நம் உடல் உழைப்பால் பிறருக்கு உதவ வேண்டும்.

(v) பிறர் மனம் புண்படாதபடி பேசுவதே பெரிய நற்பண்பாகும்.

(vi) நமது கண்கள் நல்ல நூல்களைப் படிக்கவும், நல்ல காட்சிகளை (திரைப்படம், தொலைக்காட்சி காணவும் செய்ய வேண்டும்.

(vii) கோபமின்றி வாழ்தல் போன்றவை நாம் செய்ய வேண்டிய நற்செயல்கள் ஆகும்.

## அயோத்திதாசர் சிந்தனைகள்

**மதிப்பீடு**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1.அயோத்திதாசர் ................ சமூகச் சீர்திருத்தத்தின் தந்தை என்று போற்றப்படுகிறார்.

அ) தமிழக ஆ) இந்திய இ) தென்னிந்திய ஈ) ஆசிய

**இ) தென்னிந்திய**

2.அயோத்திதாசர் நடத்திய இதழ் ................

அ) ஒருபைசாத் தமிழன் ஆ) காலணாத் தமிழன்

இ) அரைப்பைசாத் தமிழன் ஈ) அரையணாத் தமிழன்

**அ) ஒருபைசாத் தமிழன்**

3.கல்வியோடு ............ கற்க வேண்டும் என்பது அயோத்திதாசர் கருத்து.

அ) சிலம்பமும் ஆ) கைத்தொழிலும்

இ) கணிப்பொறியும் ஈ) போர்த்தொழிலும்

**ஆ) கைத்தொழிலும்**

4.அயோத்திதாசரின் புதுமையான சிந்தனைகளுக்கு அடித்தளமாக அமைந்தது அவரது ...........

அ) ஆழ்ந்த படிப்பு ஆ) வெளிநாட்டுப்பயணம்

இ) இதழியல் பட்டறிவு ஈ) மொழிப்புலமை

**அ) ஆழ்ந்த படிப்பு**

5.மக்களின் ஒழுக்கத்துடன் தொடர்புடையது ...............

அ) வானம் ஆ) கடல் இ) மழை ஈ) கதிரவன்

**இ) மழை**

**குறுவினா**

**1.அயோத்திதாசரிடம் இருந்த ஐந்து பண்புகள் யாவை?**

(i) நல்ல சிந்தனை

(ii) சிறப்பான செயல்

(iii) உயர்வான பேச்சு

(iv) உவப்பான எழுத்து

(v) பாராட்டத்தக்க உழைப்பு

**2.ஒரு சிறந்த வழிகாட்டி எவ்வாறு இருக்கவேண்டும் என அயோத்திதாசர் கூறுகிறார்?**

'ஒரு சிறந்த வழிகாட்டி மக்களுள் மாமனிதராக, அறிவாற்றல் பெற்றவராக, நன்னெறியைக் கடைப்பிடிப்பவராக இருக்க வேண்டும்' என்று அயோத்திதாசர் கூறுகிறார்.

**3.திராவிட மகாஜன சங்கம் எவற்றுக்காகப் போராடியது?**

திராவிட மகாஜன சங்கம் சாலைகள் அமைத்தல், கால்வாய்கள் பராமரித்தல், குடிகளின் பாதுகாப்புக்குக் காவல்துறையினரை நியமித்தல், பொது மருத்துவமனைகள் அமைத்தல், சிற்றூர்கள் தோறும் கல்விக்கூடங்கள் ஏற்படுத்துதல் போன்றவற்றுக்காகப் போராடியது.

**சிறுவினா**

**1.அயோத்திதாசரின் இதழ்ப்பணி பற்றி எழுதுக.**

(i) அயோத்திதாசர் 1907ஆம் ஆண்டு சென்னையில் "ஒரு பைசாத் தமிழன்" என்னும் வார இதழை காலணா விலையில் தொடங்கினார்.

(ii) ஓர் ஆண்டிற்குப்பின் அவ்விதழின் பெயரைத் "தமிழன்" என மாற்றினார்.

(iii) உயர்நிலையையும் இடைநிலையையும் கடைநிலையையும் பாகுபடுத்தி அறியமுடியாத மக்களுக்கு நீதி, நேர்மை, சரியான பாதை ஆகியவற்றைத் தெளிவுபடுத்துவதே இவ்விதழின் நோக்கம் என்று அயோத்திதாசர் குறிப்பிட்டார்.

(iv) இவர் 'தமிழன் இதழ் மூலம் தமிழ்நாடு மட்டுமின்றி மைசூர், கோலார், ஐதராபாத், இரங்கூன், மலேசியா, ஆஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் வாழ்ந்த தமிழர்களுக்கும் பகுத்தறிவுச் சிந்தனை, இன உணர்வு, சமூகச் சிந்தனை ஆகியவற்றை ஊட்டினார்.

(v) இவர் தமது நூல்கள் மூலமாகவும் தமது சீர்திருத்தச் சிந்தனைகளை வெளியிட்டார்.

**2.அரசியல் விடுதலை பற்றிய அயோத்திதாசரின் கருத்துகள் யாவை?**

(i) விடுதலை என்பது வெறும் ஆட்சிமாற்றம் மட்டுமன்று.

(ii) அது மக்களின் வாழ்க்கையில் நல்ல மாற்றங்களை ஏற்படுத்துவதாக அமையவேண்டும் என்பது அயோத்திதாசர் கருத்து.

(iii) "சுயராஜ்ஜியத்தின் நோக்கம் அதிகாரத்தைக் கைப்பற்றுவதாக மட்டும் இருக்கக்கூடாது;

(iv) மக்களின் சமூக பொருளாதார வளர்ச்சியையும் உள்ளடக்கியதாக அஃது அமையவேண்டும்.

(v) மக்கள் வாழ்க்கையில் மாற்றம் உண்டானால் ஒழிய, நாடு முன்னேற முடியாது" என்று ஆணித்தரமாகக் கூறினார் அயோத்திதாசர்.

**நெடுவினா**

**1.வாழும்முறை, சமத்துவம் ஆகியன பற்றிய அயோத்திதாசரின் சிந்தனைகளைத் தொகுத்து எழுதுக.**

(i) மக்கள் வாழவேண்டிய முறை பற்றிய அயோத்திதாசரின் சிந்தனைகள் சிறப்பானவையாகும்.

(ii) மக்கள் அனைவரும் அன்புகொண்டு வாழவேண்டும்; கோபம், பொறாமை, பொய், களவு போன்றவற்றைத் தம் வாழ்விலிருந்து நீக்கி வாழவேண்டும்.

(iii) பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யக்கூடாது. மேலும் மதியை அழிக்கும் போதைப் பொருள்களைக் கையாலும் தொடுதல் கூடாது.

(iv) ஒரு குடும்பத்தில் அன்பும் ஆறுதலும் நிறைந்தால் அக்குடும்பம் வாழும் ஊர் முழுவதும் அன்பும் ஆறுதலும் பெறும்.

(v) ஊர்கள் அன்பும் ஆறுதலும் பெறுமானால் நாடு முழுவதும் அன்பும் ஆறுதலும் பெற்றுத் திகழும்.

(vi) இத்தகைய நாட்டில் புலியும் பசுவும் ஒரே நீர்த்துறையில் நீர் அருந்தும் என்பவை அயோத்திதாசர் கருத்துகள் ஆகும்.

சமத்துவம் :

(i) அயோத்திதாசர், மக்கள் அனைவரும் சம உரிமை பெற்றுச் சமத்துவமாக வாழ வேண்டும் என்று விரும்பினார்.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



(ii) கல்வி, வேளாண்மை, காவல்துறை போன்ற அனைத்துத் துறைகளிலும் மக்கள் அனைவருக்கும் சமவாய்ப்பு வழங்க வேண்டும்.

(iii) ஊராட்சி, நகராட்சி, சட்டமன்றம், நாடாளுமன்றம் போன்றவற்றிலும் எல்லா வகுப்பினருக்கும் உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும்.

(iv) இவற்றில் இந்து, பௌத்தர், கிறித்துவர், இசுலாமியர், ஆங்கிலோ இந்தியர், ஐரோப்பியர் போன்ற அனைவருக்கும் வாய்ப்பளிக்க வேண்டும் எனத் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார் அயோத்திதாசர்.

**சிந்தனை வினா**

**1.ஒரு சமூகம் உயர்வடைய வேண்டுமானால் மக்களிடம் இருக்க வேண்டிய உயர்பண்புகள் யாவை?**

(i) அரசாங்கம் கூறும் சட்டத்திட்டங்களைப் பின்பற்ற வேண்டும். உதாரணமாக இருசக்கர வாகன ஓட்டிகள் தலைக்கவசம் அணிதல்.

(ii) சண்டை சச்சரவுகள் இன்றி வாழ்தல், ஒற்றுமையைப் பேணுதல்.

(iii) பொது இடங்களைச் சரியான முறையில் பயன்படுத்துதல்.

(iv) சுற்றுச்சூழலை பாதிக்கும் செயல்களான மரங்களை வெட்டுதல், நெகிழியைப் பயன்படுத்துதல் ஆகியவற்றைத் தவிர்த்தல்.

(v) நமது தமிழ்ப் பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றை அடுத்த தலைமுறையினருக்கு அறிவுறுத்தல் .

(vi) பெரியோரை மதித்தல், இறை வழிபாடு போன்றவற்றை கடைப்பிடித்தல் ஆகிய உயர்பண்புகள் அடிப்படைப் பண்புகளாகும்.

## மனித யந்திரம்

**மதிப்பீடு**

**1.மனித யந்திரம் கதையை மீனாட்சிசுந்தரம் கூறுவதாக மாற்றி எழுதுக.**

நான் ஒரு ஸ்டோரில் குமாஸ்தாவாக நாற்பத்தைந்து ஆண்டுகளாகப் பணிபுரிகின்றேன். கடையில் வரவு செலவு வளர்ந்தது. அதேபோல் எனக்குக் கவலையும் வளர்ந்தது.

தினமும் ஆற்றில் குளியல், நெற்றியில் விபூதி, குங்குமம், சந்தனம் என நான் வேலைக்குச் செல்லும் காட்சி பழுதுபடாத இயந்திரத்தை நினைவுபடுத்தும். நான் சாதுவாக இருப்பேன். என்னைப் பாதுகாத்துக் கொள்ள உண்மை , நாணயம் முதலிய பழக்கங்களை உறுதியாக மேற்கொள்வேன்.

இவ்வாறு இருந்த என் மனதில் ஆசை துளிர்விட்டது. மாடு கன்று வாங்க வேண்டும், அடகு வைத்த நிலத்தைத் திருப்ப வேண்டும், ஒரு மீனாட்சி ஸ்டோர் வைத்து இஷ்டப்படி ஆட வேண்டும் என்ற எண்ணம் தலைதூக்கியது. அதுமட்டுமா? கொழும்புக்குப் போய்விட்டு ஆடம்பரமாகத் திரும்ப வேண்டும், எதிரே வருபவர்கள் அண்ணாச்சி சௌக்கியமா? என்று கேட்க வேண்டும் !

தினசரி பணப்புழக்கம் என் கையில்தான். ராத்திரியோடு ராத்தியாகக் கம்பி நீட்டிவிடலாம் என்று எண்ணினேன்.

பெட்டிச் சொருகை இழுத்து செம்பு, நிக்கல், வெள்ளி என்று பாராமல் மடமடவென்று எண்ணினேன். நாற்பதும், சில்லறையும் இருந்தது. எனது மடியில் எடுத்துக் கட்டிக் கொண்டேன். விளக்கை அணைத்தேன். கதவைப் பூட்டினேன். ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்றேன். பத்தேகால் அணாவைக் கொடுத்து டிக்கெட் வாங்கினேன். தூத்துக்குடி இரயிலில் சன்னலோரத்தில் உட்கார்ந்தேன்.

அங்கு வந்த என் நண்பரான ரயில்வே போலீஸ் கலியாண சுந்தரம் “ஏது இந்த ராத்திரியில்” என்றார். நான் அவரைப் பார்க்கவில்லை. அவருடைய காக்கி உடையைத்தான் பார்த்தேன். “தூத்துக்குடி வரை” என்று வாய் என்னையறியாமல் கூறியது.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



எனக்கு நாக்கு வறண்டது. கண்கள் சுழன்றன. சோடா குடித்தேன். கண்ணை மூடினேன். கலியாணசுந்தரம் பார்த்துவிட்டான் ! நாளைக்கு என் குட்டு வெளிப்பட்டுப் போகும் எனத் தோன்றியது. ரெயிலை விட்டு இறங்கினேன் . நேராக ஸ்டோருக்குச் சென்றேன். எடுத்த சில்லறையைப் பெட்டிக்குள் வைத்தேன். என் கணக்கில் பதினொன்றே காலணா என்று எழுதினேன்.

ஸ்டோரை மூடிவிட்டுப் புறப்பட்டேன். முதலாளி வீட்டிற்குச் சென்றேன். அவர் ஏன் இவ்வளவு நேரம் என்று கேட்டார். "இல்லே, சோலி இருந்தது. எம்பத்துலே இன்னிக்கி பதினொண்ணே காலணா எழுதியிருக்கேன்," என்றேன். நாவறண்டு போனது. கண்ணை மூடிக்கொண்டு உறங்கிய முதலாளியைச் சற்று நேரம் பார்த்துவிட்டு மெதுவாக நடந்தேன்.

## யாப்பு இலக்கணம்

**மதிப்பீடு**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1.அசை ……………… வகைப்படும்.

அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து

**அ) இரண்டு**

2.விடும் என்பது …………….. சீர்.

அ) நேரசை ஆ) நிரையசை இ) மூவசை ஈ) நாலசை

**ஆ) நிரையசை**

3.அடி ……………… வகைப்படும்.

அ) இரண்டு ஆ) நான்கு இ) எட்டு ஈ) ஐந்து

**ஈ) ஐந்து**

4.முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது ……………………

அ) எதுகை ஆ) இயைபு இ) அந்தாதி ஈ) மோனை

**ஈ) மோனை**

**பொருத்துக**

1.வெண்பா – துள்ளல் ஓசை

2. ஆசிரியப்பா – செப்பலோசை

3. கலிப்பா – தூங்கலோசை

4. வஞ்சிப்பா – அகவலோசை

**விடைகள்**

**1. வெண்பா – செப்பலோசை**

**2. ஆசிரியப்பா – அகவலோசை**

**3. கலிப்பா – துள்ளல் ஓசை**

**4. வஞ்சிப்பா – தூங்கலோசை**

**சிறுவினா**

**1.இருவகை அசைகளையும் விளக்குக.**

அசை நேரசை, நிரையசை என இருவகைப்படும்.

(i) நேரசை : குறில் அல்லது நெடில் எழுத்து, தனித்து வந்தாலும் ஒற்றுடன் சேர்ந்து வந்தாலும் நேரசையாகும். க, கல், கா, கால்.

(ii) நிரையசை : இரண்டு குறில் எழுத்துகள் அல்லது குறில், நெடில் எழுத்துகள் இணைந்து வந்தாலும் அவற்றுடன் ஒற்றெழுத்து

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



சேர்ந்து வந்தாலும் நிரையசையாகும். எ.கா. பல, பலர், சிவா, சவால்.

**2.தளை என்பது யாது?**

சீர்கள் ஒன்றோடு ஒன்றி பொருந்துவது தளை எனப்படும். முதல் சீரின் இறுதியிலும் வரும்சீரின் முதலிலும் உள்ள அசைகள் எவ்வகை அசைகள் என்பதன் அடிப்படையில் தளைகள் ஏழு வகைப்படும்.

**3.அந்தாதி என்றால் என்ன?**

ஒரு பாடலின் இறுதிச்சீர் அல்லது அடியின் இறுதிப்பகுதி அடுத்த பாடலின் முதல் சீர் அல்லது அடியின் முதலில் வருமாறு பாடப்படுவது அந்தாதி ஆகும்.

**4.பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

பா நான்கு வகைப்படும்: அவை

(i) வெண்பா

(ii) ஆசிரியப்பா

(iii) கலிப்பா

(iv) வஞ்சிப்பா

## திருக்குறள்

**மதிப்பீடு**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1.ஆண்மையின் கூர்மை ................

அ) வறியவருக்கு உதவுதல் ஆ) பகைவருக்கு உதவுதல்

இ) நண்பனுக்கு உதவுதல் ஈ) உறவினருக்கு உதவுதல்

**ஆ) பகைவருக்கு உதவுதல்**

2.வறுமை வந்த காலத்தில் ................ குறையாமல் வாழ வேண்டும்.

அ) இன்பம் ஆ) தூக்கம் இ) ஊக்கம் ஈ) ஏக்கம்

**இ) ஊக்கம்**

3.‘பெருஞ்செல்வம்’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ................

அ) பெரிய + செல்வம் ஆ) பெருஞ் + செல்வம்

இ) பெரு + செல்வம் ஈ) பெருமை + செல்வம்

**ஈ) பெருமை + செல்வம்**

4.‘ஊராண்மை ’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..................

அ) ஊர் + ஆண்மை ஆ) ஊராண் + மை

இ) ஊ + ஆண்மை ஈ) ஊரு + ஆண்மை

**அ) ஊர் + ஆண்மை**

5.திரிந்து + அற்று என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் .............

அ) திரிந்தது அற்று ஆ) திரிந்தற்று

இ) திரிந்துற்று ஈ) திரிவுற்று

**ஆ) திரிந்தற்று**

**பொருத்துக**

1. இன்பம் தருவது – நற்பண்பில்லாதவன் பெற்ற பெருஞ்செல்வம்
2. நட்பு என்பது – குன்றிமணியளவு தவறு
3. பெருமையை அழிப்பது – செல்வம் மிகுந்த காலம்

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

4. பணிவு கொள்ளும் காலம் – சிரித்து மகிழ மட்டுமன்று

5. பயனின்றி அழிவது – பண்புடையவர் நட்பு

**1. இன்பம் தருவது – பண்புடையவர் நட்பு**

**2. நட்பு என்பது – சிரித்து மகிழ மட்டுமன்று**

**3. பெருமையை அழிப்பது – குன்றிமணியளவு தவறு**

**4. பணிவு கொள்ளும் காலம் – செல்வம் மிகுந்த காலம்**

5. பயனின்றி அழிவது – நற்பண்பில்லாதவன் வெற்ற பெருஞ்செல்வம்

**குறுவினா**

**1.எது பெருமையைத் தரும்?**

காட்டு முயலை வீழ்த்திய அம்பினை ஏந்துவதைவிட யானைக்குக் குறிவைத்துத் தவறிய வேலை ஏந்துவது பெருமை தரும்.

**2.நண்பர்களின் இயல்பை அளந்து காட்டும் அளவுகோல் எது?**

நமக்கு வரும் துன்பமே நமது நண்பர்களின் உண்மையான இயல்பை அளந்து காட்டும் அளவுகோலாகும்.

**3.இவ்வுலகம் யாரால் இயங்குவதாகத் திருக்குறள் கூறுகிறது?**

இவ்வுலகம் பண்பு உடைய சான்றோரின் வழியில் நடப்பதால்தான் இயங்குகிறது.

**4.நட்பு எதற்கு உரியது என்று திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்?**

நட்பு சிரித்துப் பேசி மகிழ்வதற்கு மட்டும் உரியதன்று. நண்பர் தவறு செய்தால் அவரைக் கண்டித்துத் திருத்துவதற்கும் உரியது.

## உயிர்க்குணங்கள்

**மதிப்பீடு**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1.அடுத்தவர் வாழ்வைக் கண்டு .............. கொள்ளக்கூடாது.

அ) உவகை ஆ) நிறை இ) அழுக்காறு ஈ) இன்பம்

**இ) அழுக்காறு**

2.நாம் நீக்கவேண்டியவற்றுள் ஒன்று ................

அ) பொச்சாப்பு ஆ) துணிவு இ) மானம் ஈ) எளிமை

**அ) பொச்சாப்பு**

3.'இன்பதுன்பம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .....................

அ) இன் துன்பு ஆ) இன்பம் + துன்பம்

இ) இன்ப + அன்பம் ஈ) இன்ப + அன்பு

**ஆ) இன்பம் + துன்பம்**

4.குணங்கள் + எல்லாம் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ...............

அ) குணங்கள் எல்லாம் ஆ) குணமெல்லாம்

இ) குணங்களில்லாம் ஈ) குணங்களெல்லாம்

**ஈ) குணங்களெல்லாம்**

பொருத்துக

1. நிறை – பொறுமை

2. பொறை – விருப்பம்

3. மதம் – மேன்மை

www.Padasalai.Net www.CBSEtips.in



4. மையல் – கொள்கை

**1. நிறை – மேன்மை**

**2. பொறை – பொறுமை**

**3. மதம் – கொள்கை**

**4. மையல் – விருப்பம்**

**குறுவினா**

**1.மனிதர்களின் பொது இயல்பாகக் கன்னிப்பாவை நூல் கூறுவது யாது?**

அறிவு, கருணை, ஆசை, அச்சம், அன்பு, இரக்கம், சினம், நாணம், மேன்மை , பொறாமை, எளிமை, நினைவு, துணிவு, இன்பம், துன்பம், பொறுமை, கொள்கையைப் பின்பற்றுதல், சோர்வு, மானம், அறம், வெறுப்பு, மகிழ்ச்சி, ஊக்கம், விருப்பம், வெற்றி, பகை, இளமை, முதுமை, மறதி, ஆராய்ந்து தெளிதல்.

**2.மனிதர்களிடம் உள்ள பண்புகளாகக் கன்னிப்பாவை நூல் கூறுவனவற்றுள் நற்பண்புகள் யாவை?**

அறிவு, கருணை, அன்பு, இரக்கம், நாணம், மேன்மை , எளிமை, நினைவு, துணிவு, இன்பம், பொறுமை, கொள்கையைப் பின்பற்றுதல், மானம், அறம், மகிழ்ச்சி, ஊக்கம், விருப்பம், வெற்றி, இளமை, ஆராய்ந்து தெளிதல்.

**சிறுவினா**

**1.மனிதர்களிடம் குவிந்திருக்கும் பண்புகளாகக் கன்னிப்பாவை நூல் கூறுவன யாவை?**

அறிவு, கருணை, ஆசை, அச்சம், அன்பு, இரக்கம், சினம், நாணம், மேன்மை , பொறாமை, எளிமை, நினைவு, துணிவு, இன்பம், துன்பம், பொறுமை, கொள்கையைப் பின்பற்றுதல், சோர்வு, மானம், அறம், வெறுப்பு, மகிழ்ச்சி, ஊக்கம், விருப்பம், வெற்றி, பகை, இளமை, முதுமை, மறதி, ஆராய்ந்து தெளிதல் போன்றவை மனிதர்களிடம் உள்ள பண்புகளாகும்.

## இளைய தோழனுக்கு

**மதிப்பீடு**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1.உன்னுடன் நீயே .................... கொள்.**

அ) சேர்ந்து ஆ) பகை இ) கைகுலுக்கிக் ஈ) நட்பு

**இ) கைகுலுக்கிக்**

2.கவலைகள் ..................... அல்ல.

அ) சுமைகள் ஆ) சுவைகள் இ) துன்பங்கள் ஈ) கைக்குழந்தைகள்

**ஈ) கைக்குழந்தைகள்**

3.‘விழித்தெழும் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ...................

அ) விழி + எழும் ஆ) விழித்து + எழும்

இ) விழி + தெழும் ஈ) விழித் + தெழும்

**ஆ) விழித்து + எழும்**

4.போவதில்லை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ................

அ) போவது + இல்லை ஆ) போ + இல்லை

இ) போவது + தில்லை ஈ) போவது + தில்லை

**அ) போவது + இல்லை**

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

5.‘படுக்கையாகிறது என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....................

அ) படுக்கை + யாகிறது ஆ) படுக்கையா + ஆகிறது

இ) படுக்கையா + கிறது ஈ) படுக்கை + ஆகிறது

**ஈ) படுக்கை + ஆகிறது**

6.தூக்கி + கொண்டு என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ..................

அ) தூக்கிகொண்டு ஆ) தூக்குக்கொண்டு

இ) தூக்கிக்கொண்டு ஈ) தூக்குகொண்டு

**இ) தூக்கிக்கொண்டு**

7.விழித்து + எழும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ....................

அ) விழியெழும் ஆ) விழித்தெழும்

இ) விழித்தழும் ஈ) விழித்து எழும்

**ஆ) விழித்தெழும்**

**குறுவினா**

**1.கவலைகளைக் கவிஞர் எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?**

கவலைகளைக் கவிஞர் கைக்குழந்தைகளோடு உருவகப் படுத்துகிறார்.

**2.தோல்வி எப்போது தூண்டுகோலாகும்?**

உலகிற்கு ஒளியேற்ற எண்ணெயாய், திரியாய் நம்மையே மாற்றினால் தோல்வி நம் உயர்விற்குத் தூண்டுகோலாகும்.

**சிறுவினா**

**1.பூமி எப்போது பாதையாகும்?**

(i) நாளை மட்டுமல்ல; இன்றும் நமது நாள்தான். அதனால் உடனே செயல்படத் தொடங்க வேண்டும். நாம் செல்லும் பாதைகள் நம்மை எதிர்க்கப்போவதில்லை.

(ii) உலகிற்கு ஒளியேற்ற எண்ணெயாய், திரியாய் நம்மையே நாம் மாற்றினால் தோல்வியும் நம் உயர்விற்குத் தூண்டுகோலாகும். வெற்றி நம் அங்கமாகி வாழ்வில் ஒளியேற்றும்.

(iii) கவலைகளை உள்ளத்தில் தேங்கவிட வேண்டாம். நம்மைப் பாராட்டிப் புத்துணர்வூட்ட ஒருவரும் இல்லையென்று வருந்தக்கூடாது. நம்மைவிட ஒருவரும் நம்மைப் பாராட்டிப் புத்துணர்வூட்ட முடியாது.

(iv) நாம் சோர்ந்து தளர்ந்தால் பூமி நம் நோய்ப்படுக்கையாகிவிடும். நாம் கிளர்ந்து எழவேண்டும். அப்போது நமக்குப் பூமி பாதையாகும்.

**சிந்தனை வினா**

**1.வாழ்வில் உயர நம்பிக்கையைப் போன்று வேறு என்னென்ன பண்புகள் தேவை என்று நீங்கள் கருதுகிறீர்கள்?**

1. இடைவிடா முயற்சி
2. திட்டமிட்ட உழைப்பு
3. காலமறிந்து செயல்படுதல்
4. கடின உழைப்பு
5. சோர்வில்லாப் பண்பு
6. தோல்வியைக் கண்டு மனம் தளராமை
7. பதற்றமின்றி செயல்களைச் செய்தல்
8. மிகுதியான தன்னம்பிக்கை
9. பிறரை எதிர்பார்க்காமல் செயல்களை மேற்கொள்ளுதல்

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



10. விட்டுக்கொடுத்து வாழும் பண்பு
11. சினமின்மை

## சட்டமேதை அம்பேத்கர்

**மதிப்பீடு**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1.இந்தியாவின் முதல் சட்ட அமைச்சர் ...............

அ) இராதாகிருட்டிணன் ஆ) அம்பேத்கர்

இ) நௌரோஜி ஈ) ஜவஹர்லால் நேரு

**ஆ) அம்பேத்கர்**

2.பூனா ஒப்பந்தம் ...................... மாற்ற ஏற்படுத்தப்பட்டது.

அ) சொத்துரிமையை ஆ) பேச்சுரிமையை

இ) எழுத்துரிமையை ஈ) இரட்டை வாக்குரிமையை

**ஈ) இரட்டை வாக்குரிமையை**

3.சமத்துவச் சமுதாயம் அமைய அம்பேத்கர் ஏற்படுத்திய இயக்கம் ...............

அ) சமாஜ் சமாத சங்கம் ஆ) சமாத சமாஜ பேரவை

இ) தீண்டாமை ஒழிப்புப் பேரவை ஈ) மக்கள் நல இயக்கம்

**அ) சமாஜ் சமாத சங்கம்**

4.அம்பேத்கரின் சமூகப்பணிகளைப் பாராட்டி இந்திய அரசு .......... விருது வழங்கியது.

அ) பத்மஸ்ரீ ஆ) பாரத ரத்னா

இ) பத்மவிபூசண் ஈ) பத்மபூசன்

**ஆ) பாரத ரத்னா**

**கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. புத்த சமயம் தொடர்பாக அம்பேத்கர் எழுதிய நூல் ......................
2. அம்பேத்கர் நிறுவிய அரசியல் கட்சியின் பெயர் .....................
3. பொருளாதாரப் படிப்பிற்காக அம்பேத்கர் ................. சென்றார்.

**1. புத்தரும் அவரின் தம்மமும்.**

**2. சுதந்திரத் தொழிலாளர் கட்சி**

**3. இலண்டன்**

**குறுவினா**

**1.அம்பேத்கர் தன் பெயரை ஏன் மாற்றிக்கொண்டார்?**

அம்பேத்கர் சதாராவில் உள்ள பள்ளியில் தமது கல்வியைத் தொடங்கினார். இவர் ஒடுக்கப்பட்ட பிரிவைச் சேர்ந்தவர் என்பதால் பள்ளிப்பருவத்திலேயே பல அவமதிப்புகளுக்கு ஆளானார். மகாதேவ் அம்பேத்கர் என்ற ஆசிரியர், இவர்மீது அன்பும் அக்கறையும் கொண்டவராக விளங்கினார். இதனால், பீமாராவ் சக்பால் அம்பவாதேகர் என்னும் தம் பெயரைப் பீமாராவ் ராம்ஜி அம்பேத்கர் என்று மாற்றிக் கொண்டார்.

**2.தீண்டாமைக்கு எதிராக அம்பேத்கர் மேற்கொண்ட பணிகள் இரண்டினை எழுதுக.**

(i) அம்பேத்கர் இந்தியச் சமூக அமைப்பில் நிலவிய சாதியமைப்பையும் தீண்டாமைக் கொடுமைகளையும் எதிர்த்துத் தீவிரமாகப் போராடினார்.

(ii) ஒடுக்கப்பட்ட பாரதம் என்னும் இதழை 1927ஆம் ஆண்டு துவங்கினார். சமத்துவச் சமுதாயத்தை அமைக்கும் நோக்கில் இவர் சமாஜ் சமாத சங்கம் என்னும் அமைப்பை உருவாக்கினார்.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

(iii) 1930ஆம் ஆண்டு நாசிக் கோயில் நுழைவுப் போராட்டத்தினை நடத்தி வெற்றி கண்டார்.

**3.வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்ளும் முன் அம்பேத்கர் கூறியது யாது?**

வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்ளும் முன் அம்பேத்கர் கூறியது: 'என் மக்களுக்கு நியாயமாக என்ன கிடைக்க வேண்டுமோ, அதற்காகப் போராடுவேன். அதே சமயத்தில் சுயராஜ்ய கோரிக்கைகளை முழு மனத்துடன் ஆதரிப்பேன்' என்று அம்பேத்கர் கூறினார்.

**சிறுவினா**

**1.இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உருவாக அம்பேத்கர் ஆற்றிய பணிகள் யாவை?**

(i) 15-08-1947 அன்று இந்தியா விடுதலை பெற்றது. ஜவகர்லால் நேரு தலைமையில் அமைந்த அரசில் அம்பேத்கர் சட்ட அமைச்சராகவும் இந்திய அரசியல் சாசன சபையின் தலைவராகவும் பொறுப்பேற்றுக் கொண்டார்.

(ii) 1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 29ஆம் நாள் அரசியல் நிர்ணய மன்றம் ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. அதன்படி இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை எழுத அம்பேத்கர் தலைமையில் அவர் உட்பட ஏழுபேர் கொண்ட அரசியலமைப்புச் சட்ட வரைவுக்குழு உருவாக்கப்பட்டது.

(iii) இக்குழுவில் கோபால்சாமி, அல்லாடி கிருஷ்ணமூர்த்தி, கே.எம். முன்ஷி, சையது முகமது சாதுல்லா, மாதவராவ், டி.பி. கைதான் ஆகியோர் உறுப்பினர்களாக இடம் பெற்றனர். இக்குழு தனது அறிக்கையை 1948, பிப்ரவரி 21-இல் ஒப்படைத்தது.

(iv) அம்பேத்கர் தலைமையிலான சட்ட வரைவுக்குழு, அப்போது மக்களாட்சி நடைபெற்ற நாடுகள் பலவற்றிலிருந்து இந்திய நடைமுறைக்குப் பொருந்தும் சட்டக்கூறுகளை. இந்திய அரசியலமைப்பு வரைவில் சேர்த்தது.

(v) அம்பேத்கரால் உருவாக்கப்பட்ட இந்த அரசியல் அமைப்புச் சட்டம், குடிமக்களின் உரிமைகளுக்குப் பலவகைகளில் பாதுகாப்பை அளிப்பதாக அமைந்தது. இது மிகச்சிறந்த சமூக ஆவணம் என வரலாற்று ஆசிரியர்களால் போற்றப்படுகிறது.

**2.அம்பேத்கரின் முதல் தேர்தல் வெற்றி குறித்து எழுதுக.**

(i) 1935ஆம் ஆண்டில் மாநில சுயாட்சி வழங்குவதற்கான இந்திய அரசாங்கச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி பொதுத்தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

(ii) ஏழை விவசாயிகள், தொழிலாளர்கள் ஆகியோரின் நலனைக் பாதுகாக்கத் தேர்தலில் போட்டியிட அம்பேத்கர் விரும்பினார்.

(iii) சுதந்திரத் தொழிலாளர் கட்சியைத் தொடங்கித் தேர்தலில் போட்டியிட்டார்.

(iv) அவர் வெற்றி பெற்றதுடன் அவரின் கட்சி வேட்பாளர்கள் பதினைந்து பேரும் வெற்றி பெற்றனர்.

**நெடுவினா**

**1.பூனா ஒப்பந்தம் பற்றி எழுதுக.**

(i) ஒடுக்கப்பட்டோருக்குத் தனி வாக்குரிமையும் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவமும் வழங்கப்பட வேண்டும் என்று இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் அம்பேத்கர் வலியுறுத்தினார்.

(ii) இதன் விளைவாக ஒரு தொகுதியில் பொது வேட்பாளரைத் தேர்ந்தெடுக்க ஒரு வாக்கும் ஒடுக்கப்பட்ட சமூக வேட்பாளரைத் தேர்ந்தெடுக்க ஒரு வாக்கும் அளிக்கும் இரட்டை வாக்குரிமை வழங்கப்பட்டது. ஆனால் இதை ஏற்க மறுத்த காந்தியடிகள் உண்ணாவிரதம் மேற்கொண்டார்.

(iii) இதன் விளைவாக 1931ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் இருபத்து நான்காம் நாள் காந்தியடிகளும் அம்பேத்கரும் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டனர்.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

(iv) அதன்படி ஒடுக்கப்பட்டோருக்குத் தனி வாக்குரிமை என்பதற்குப் பதிலாகப் பொது வாக்கெடுப்பில் தனித்தொகுதி வழங்குவது என முடிவு செய்யப்பட்டது. இந்த ஒப்பந்தமே பூனா ஒப்பந்தம் எனப்பட்டது.

**சிந்தனை வினா**

**1.பாகுபாடில்லாத மக்கள் சமூகம் உருவாக நமது கடமைகளாக நீங்கள் கருதுவன யாவை?**

நாம் வாழும் சமூகத்தில் ஒவ்வொரு தனிமனிதனுக்கும் பங்குண்டு. நாம் பேசும் சொற்கள், செய்யும் செயல்கள் மற்றவரைப் பாதிக்காமலும், துன்புறுத்தாமலும் இருக்க வேண்டும்.

ஒவ்வொரு மனிதரும் வெவ்வேறு பெயர்களுடனும் வெவ்வேறு கடமைகளுடன்தான் வாழ்கிறோம். வீட்டில் மகன் அல்லது மகள், பள்ளியில் மாணவன், அலுவலகத்தில் தொழிலாளி அல்லது முதலாளி, சமுதாயத்தில் குடிமகன் எனப் பல்வேறு வேடங்களைத் த தரித்துக் கொண்டுள்ளோம். தரித்துள்ள வேடத்தில் தவறின்றி நடந்துகொள்ள வேண்டும்.

தனக்குக் கீழ் உள்ளவர்களுக்கும், தன்னோடு வாழ்பவர்களுக்கும் உண்டான உரிமைகளைப் பேணி வாழ்வதற்கு அவன் முன் வர வேண்டும். அவ்வாறு வாழும்போது சமுதாயத்தில் மனித நேயம் தழைத்துவிடும். மனித நேயம் பேணப்பட்டால் உரிமைகள் பேணப்படும். சமூகச் சீர்குலைவு இருக்காது. ஒழுக்கக்கேடு, அச்சம் நிறைந்த சூழ்நிலை இவையெல்லாம் இல்லாமல் மக்கள் நிம்மதியாக வாழ்வார்கள்.

ஆண், பெண் வேறுபாடுகளும், உயர்ந்தவர். தாழ்ந்தவர் என்று பாகுபாடின்றி இருக்க வேண்டும். இரு பாலரும் சம உரிமை பெற்று வாழ்ந்தால், பாகுபாடில்லாத மக்கள் சமூகம் நீ உருவாகும்.

## பால் மனம்

**1.குழந்தைகளின் நற்பண்புகளாகப் 'பால் மனம்' கதையின் வழி நீங்கள் அறிந்தவற்றை எழுதுக.**

(i) குழந்தைக்கு வீட்டு நாய், தெருநாய் வேறுபாடு தெரியாது. இரண்டையும் ஒன்றாகவே பார்க்கும்.

(ii) கீரை விற்கும் கிழவியைக் கூட தன் வீட்டில் ஒருவராகப் பார்க்கும் பரந்த குணம்.

(iii) கூலித்தொழிலாளி வெயிலில் காலில் செருப்பில்லாமல் சுமை நிறைந்த வண்டியை இழுப்பதைப் பார்க்கும் போது அத்தொழிலாளியின் துன்பதைக் கண்டு பொறுக்காத மனம்.

(iv) ஆட்டுக்குட்டியின் பசியைப் போக்க, குழந்தைக்கு வைத்திருந்த புட்டிப்பாலைக் கொடுக்கும் கருணைப் பரிவு. இவையே பால் மனம் கதையின் வழி நான் அறிந்த குழந்தைகளின் நற்பண்புகள்.

**மதிப்பீடு**

**1.குழந்தை கிருஷ்ணாவின் பண்புநலன்ளைப் பற்றித் தொகுத்து எழுதுக.**

மனிதனின் படைப்பு விசித்திரமானது. அதிலும் குழந்தை பிராயம் மிகவும் அழகானது. குழந்தை கிருஷ்ணாவின் உள்ள அழகு பற்றி இக்கதையின் மூலம் பார்க்கலாம்.

குழந்தை கிருஷ்ணா பிஞ்சுவிரல், வெள்ளரிப் பிஞ்சாக முகம், சிறகு போன்ற இமைகள், கண்ணாடி போன்ற விழிகள், பூ போல் உதடுகள், ஒளியரும்புகளான பற்கள், நுங்கு நீரின் குளிர்ச்சியான குரல், தெய்வ வடிவான அழகு, முகம் உலகைப் புரிந்து கொள்ள முயலும் மனவளர்ச்சிக்கான சிந்தனைச் சாயல். இந்த ஒட்டு மொத்த இணைப்புதான் கிருஷ்ணா.

சன்னலைப் பிடித்தவாறு தெருவில் பார்த்த கிருஷ்ணா தன் அம்மாவிடம் குப்பைத் தொட்டியோரம் இருந்த சொறிநாயைக் காட்டினாள். அம்மா அது அசிங்கம் என்றும் தன் வீட்டில் இருக்கும் டாமி அழகானது, சுத்தமானது' என்றும் கூறினாள். மேலும் 'அதனைத் தொடக்கூடாது, அப்பா திட்டுவார்' என்றும் கூறினாள். கிருஷ்ணா , "திட்டவில்லையென்றால் தொடலாமா?" என்று கேட்டாள். கிருஷ்ணாவிற்குத் தெரு நாயும், வீட்டு நாயும் வேறில்லை.

www.Padasalai.Net

வீட்டுவாசலில் கீரைவிற்கும் கிழவியைப் பார்த்ததும் உற்சாகமாக சென்ற கிருஷ்ணாவை அம்மா “அவளைத் தொடாதே உடம்பு சரியில்லாதவள்” என்று கூவினாள். அக்கண்டிப்பில் 3 திகைத்த கிருஷ்ணா “அப்பாவுக்கு உடம்பு சரியில்லாதப்போ நீ தொடவில்லையா சித்தப்பா?” என்று கேட்டாள்.

கிருஷ்ணா சித்தப்பாவுடன் காந்தி மண்டபத்துக்குச் சென்று விட்டுத் திரும்பி வரும் 5 போது ஒருவர் காலில் செருப்பில்லாமல் நிறைந்த பாரத்துடன் கைவண்டியை இழுத்துச் செல்வதைப் பார்த்தாள். அவருக்குக் கல்குத்தும், வெயில் சுடும் எனக் கவலைப்பட்டாள். தன் சித்தப்பாவிடம் “உன் செருப்பைக் கொடுத்து விடு, நீதான் பூட்ஸ் வச்சிருக்கியே” என்றாள்.

அடுத்த நாள் காலையில் தெருவை ஒட்டிய வராந்தாவில் மழையின் குளிர் தாங்காமல் இரண்டு சிறு ஆட்டுக்குட்டிகள் நிற்பதைக் கண்டாள். உடனே கிருஷ்ணா, கைக்குழந்தையின் அருகில் வைத்திருந்த பால் புட்டியை எடுத்து வந்து ஒரு குட்டியின் வாயில் வைத்து அதற்குப் பால் ஊட்டினாள். அதைக் கண்ட அம்மாவும், அப்பாவும், சித்தப்பாவும் வியப்புடன் நின்றனர்.

தெருநாயும் வீட்டு நாயும் வேறில்லை என்ற சமரச நோக்கம், கீரை விற்கும் பாட்டியிடம் காட்டிய பாசம், வண்டி இழுக்கும் மனிதரின் துன்பதைக் கண்டு பொறுக்காத மனம், ஆட்டுக்குட்டியிடம் காட்டிய கருணைப் பரிவு இவையெல்லாம் குழந்தை கிருஷ்ணாவின் சிறப்பு பண்புநலன்கள்.

ஆனால் அவள் எட்டு வயதில் தன் தம்பி தெருநாய்க்குப் பால் சாதம் பேடுவதைத் தவறு எனக் கூறுகிறாள். கல்லடிப்பட்ட ஆட்டுக்குட்டியைப் பார்த்துக் கைகொட்டி நகைக்கிறாள். கூலியாள் குடிக்கத் தண்ணீர் கேட்டால், “எப்பவும் இங்கேதான் வருவாயா? நான் தரமாட்டேன்” என்று கூறுகிறாள். இதையெல்லாம் கிருஷ்ணாவின் அம்மா ஏற்றுக் கொள்கிறார். உலகச்சூழல் ஒவ்வொரு குழந்தையையும் மாற்றிவிடுகிறது.

## அணி இலக்கணம்

**மதிப்பீடு**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1.பிறிதுமொழிதல் அணியில் ............. மட்டும் இடம்பெறும்.

அ) உவமை ஆ) உவமேயம் இ) தொடை ஈ) சந்தம்

**அ) உவமை**

2.இரண்டு பொருள்களுக்கு இடையே உள்ள ஒற்றுமையையும் வேற்றுமையையும் கூறுவது .................... அணி.

அ) ஒற்றுமை ஆ) வேற்றுமை

இ) சிலேடை ஈ) இரட்டுற மொழிதல்

**ஆ) வேற்றுமை**

3.ஒரே செய்யுளை இருபொருள் படும்படி பாடுவது ............. அணி.

அ) பிறிதுமொழிதல் ஆ) இரட்டுறமொழிதல்

இ) இயல்பு நவிற்சி ஈ) உயர்வு நவிற்சி

**ஆ) இரட்டுறமொழிதல்**

4.இரட்டுறமொழிதல் அணியின் வேறு பெயர் ................. அணி.

அ) பிறிதுமொழிதல் ஆ) வேற்றுமை

இ) உவமை ஈ) சிலேடை

**ஈ) சிலேடை**

**சிறுவினா**

**1.பிறிதுமொழிதல் அணியை விளக்கி எடுத்துக்காட்டுத் தருக.**

**அணி விளக்கம் :**

உவமையை மட்டும் கூறி, அதன் மூலம் கூற வந்த கருத்தை உணரவைப்பது பிறிதுமொழிதல் அணி எனப்படும்.

எ.கா. கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும்

நாவாயும் ஓடா நிலத்து.

இத்திருக்குறள், "நிலத்தில் ஓடும் தேர் கடலில் ஓடாது. கடலில் ஓடும் கப்பல் நிலத்தில் ஓடாது என்று உவமையை மட்டும் கூறுகிறது.

இதன் மூலம் 'ஒவ்வொருவரும் தமக்கு உரிய இடத்தில் வெற்றி பெற முடியும். தமக்குப் பொருத்தமில்லாத இடத்தில் வெற்றி பெறுதல் இயலாது' என்னும் கருத்து விளக்கப்படுகிறது. எனவே இக்குறட்பாவில் பிறிதுமொழிதல் அணி இடம் பெற்றுள்ளது.

**2.வேற்றுமை அணி என்றால் என்ன?**

இரண்டு பொருள்களுக்கு இடையே உள்ள ஒற்றுமையைக் கூறி பிறகு அவற்றுள் ஒன்றை வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமையணி எனப்படும்.

**3.இரட்டுறமொழிதல் அணி எவ்வாறு பொருள் தரும்?**

இரட்டுறமொழிதல் அணியில் ஒரு சொல் அல்லது தொடர் இருபொருள் தருமாறு அமையும்.

**இடங்களைப் பொருத்தமான சொற்களால் நிரப்புக.**

1. சிறுமி ................ (தனது/தமது) கையில் மலர்களை வைத்திருந்தாள்.
2. அம்பேத்கர் ஒடுக்கப்பட்ட மக்களின் உயர்வுக்காகத் ................ (தனது தமது) உழைப்பை நல்கினார்.
3. உயர்ந்தோர் .............. (தம்மைத்தாமே/தன்னைத்தானே) புகழ்ந்து கொள்ளமாட்டார்கள்.
4. இவை ................. (தான்/தாம்) எனக்குப் பிடித்த நூல்கள்.
5. குழந்தைகள்............... (தன்னால் தம்மால்) இயன்ற உதவிகளைப் பிறருக்குச் செய்கின்றனர்.

**1. தனது**

**2. தமது**

**3. தம்மைத்தாமே**

**4. தாம்**

**5. தம்மால்**

**தொடரில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக.**

முதியவர் ஒருவர் தனது கால்களில் செருப்பில்லாமல் தன்னால் இழுக்க முடியாத வண்டியை இழுத்துச் சென்றார். அதனைக் கண்ட கிருஷ்ணா தம்முடைய சித்தப்பாவிடம் அவருடைய காலணிகளைக் கொடுக்குமாறு கூறினாள். அவரிடம் விலையுயர்ந்த காலணிகள் இருந்தன. எனவே, தனது வேறு காலணிகளைப் பிறகு தருவதாகச் சித்தப்பா கூறினார்.

முதியவர் ஒருவர் தனது கால்களில் செருப்பில்லாமல் தன்னால் இழுக்க முடியாத வண்டியை இழுத்துச் சென்றார். அதனைக் கண்ட கிருஷ்ணா தன்னுடைய சித்தப்பாவிடம் அவருடைய காலணிகளைக் கொடுக்குமாறு கூறினாள். அவரிடம் விலையுயர்ந்த காலணிகள் இருந்தன. எனவே, தனது வேறு காலணிகளைப் பிறகு தருவதாகச் சித்தப்பா கூறினார்.

www.Padasalai.Net www.CBSEtips.in



**கட்டுரை எழுதுக**

**உழைப்பே உயர்வு**

**முன்னுரை:**

நாம் மேற்கொண்ட செயலில் வெற்றி பெறுவதற்கு உழைப்பதைத் தவிர வேறுவழியில்லை. அத்தகைய உழைப்பைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**மாணவர்களின் உழைப்பு :**

முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்' என்பது சான்றோர் வாக்கு. இது அனைத்து மாணவர்களுக்கும் பொருந்தும். ஒரு தேர்வில் மட்டும் முதல் மாணவனாக இருந்தால் போதாது. எல்லாத் தேர்வுகளிலும் முதல் மாணவனாகத் திகழ முயற்சியும் பயிற்சியும் தேவை. இம்முயற்சியும் பயிற்சியுமே உழைப்பு. மாணவர்கள் ஒவ்வொருவரும் ஓர் உயர்ந்த குறிக்கோளை மனதில் நிறுத்தி அக்குறிக்கோளில் வெற்றி பெற உழைக்க வேண்டும்.

**ஊக்கமில்லா உழைப்பு :**

சோம்பல், விரைந்து செய்ய வேண்டியவற்றை தாமதித்துச் செய்யும் இயல்பு, மறதி, தூக்கம் ஆகியன ஊக்கத்தை அறவே ஒழிக்கும் திறமுடையன. ஊக்கமில்லாதவர் மக்களாகார்; மரங்களாவர்' என்பது வள்ளுவர் மொழி. காட்டில் நிற்கும் மரங்கள் காய்கனிகளைத் தரும். இறைவன் உறையும் திருக்கோயில், இல்லம், தேர், மரக்கலம் ஆகியன செய்வதற்கு மரம் பயன்படுகிறது. ஆனால், ஊக்கமற்ற மக்களாகிய மரங்களோ எதற்கும் பயன்படுவதில்லை. ஊக்கமில்லா உழைப்பு வீணானது.

**உழைப்பின் பயன் :**

நாம் ஒரு செயலைச் செய்ய வேண்டும் என்று எண்ணுவது பெரிதல்ல. அதனைச் செயல்படுத்தி அதற்கேற்ப உழைக்க வேண்டும். அவ்வாறு ஓயாமல் உழைப்பவர்கள் விதியைக்கூட தூர விரட்டிவிடுவார்கள். கடுமையான உழைப்பிற்கு ஈடு இணை எதுவுமேயில்லை. பொறுமையாகவும் இடைவிடாமலும் உழைத்தால் வெற்றி நிச்சயம். வெற்றியை உருவாக்குவதில் உழைப்பு மிகப்பெரிய மூலதனம்.

**முடிவுரை :**

'கையும் காலும் தான் உதவி – கொண்ட கடமைதான் நமக்குப் பதவி' என்று பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரனாரின் பாடல் வரிகளை நினைவில் வைத்து உழைப்போம்; உயர்வோம்.

**மொழியோடு விளையாடு**

**பின்வரும் வினாக்களைப் படித்து இருவினாக்களுக்கு ஒரு விடை தருக.**

**(எ.கா.) குழம்பும் கூட்டும் மணப்பது ஏன்? குருதி மிகுதியாய்க் கொட்டுவது ஏன்? பெருங்காயத்தால்**

1. ஆடை நெய்வது எதனாலே? அறிவைப் பெறுவது எதனாலே?
2. மாடுகள் வைக்கோல் தின்பது எங்கே? மன்னர்கள் பலரும் இறந்தது எங்கே?
3. கதிரவன் மறையும் நேரம் எது? கழுத்தில் அழகாய்ச் சூடுவது எது?
4. வானில் தேய்ந்து வளர்வது எது? வாரம் நான்கு கொண்டது எது?

**1. நாலால்**

**2. போரில்**

**3. மாலை**

**4. திங்கள்**

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**கலைச்சொல் அறிவோம்**

**1. குறிக்கோள் – Objective**

**2. நம்பிக்கை – Confidence**

**3. முனைவர் பட்டம் – Doctorate**

**4. வட்ட மேசை மாநாடு – Round Table Conference**

**5. இரட்டை வாக்குரிமை – Double voting**

**6. பல்கலைக்கழகம் – University**

**7. ஒப்பந்தம் – Agreement**

**8. அரசியலமைப்பு – Constitution**

www.Padasalai.Net

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com